9 வது பெருநகர குற்றவியல் நடுவர் நீதிமன்றம், சைதாப்பேட்டை, சென்னை–15.
C.C.No.7/2023

**LW10/PW1**

| | | |
|---|---|---|
| பெயர் | : | விவேக்குமார் அகர்வால் |
| வயது | : | 43 |
| தந்தை பெயர் | : | பவன்குமார் அகர்வால் |
| முகவரி | : | 1, தரைதளம், பிளாட் 10/567, 1 வது மெயின்ரோடு, பாபு நகர், மேடாவாக்கம், சென்னை 100. |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Act 44 of 1969 ) on the 25th day of March 2026

**<u>அரசு தரப்பில் அ.சா.1 முதல் விசாரணை</u>**

நான் பூமி என்ற தொண்டு நிறுவனத்தில் தற்போது இயக்குனாராக பணியாற்றி வருகிறேன். இந்த வழக்கின் புகார்தாரர் அருண்குமார் 2019 ல் இருந்து எங்களுடைய நிறுவனத்தில் பணியாற்றி வந்தார். தற்போது அவர் கனடாவில் இருந்து வருவதால் என்னை அவர் சார்பாக வழக்கை நடத்த ஒரு அங்கீகார கடிதம் அளித்ததன் பேரில் அது நீதிமன்றம் அனுமதி வழங்கியதன் பேரில் நான் சாட்சியம் அளிக்கிறேன்.

யாரோ சில நபர் எங்கள் நிறுவனத்தின் பேரை சொல்லி போலியான ஆவணங்களை காட்டி பணம் கேட்பதாக தெரிய வந்தது. ஆகையால் அப்பொழுது எங்கள் நிறுவனத்தில் பணியில் இருந்த மனுதாரர் வைத்து புகார் அளித்தேன். பிறகு நான் விசாரித்ததில் ஆஜர் எதிரிகள் எனது நிறுவனத்தின் பேரை பயன்படுத்தி பணம் வசூல் செய்யவில்லை என்று தெரிந்துகொண்டேன்.

என்னிடம் பணியாற்றிய அருண்குமார் கையொப்பம் எனக்கு நன்றாக பரிட்சையமான ஒன்று, இன்று காட்டப்படும் புகாரில் உள்ள கையெழுத்து அவருடையது தான். இந்த சாட்சி மூலமாக **புகாரில் உள்ள கையெழுத்து மட்டும் அதசாஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

எதிரிகள் ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். போதிய வாய்ப்பளித்தும் முன்வராததால் குறுக்கு விசாரணை முடித்து வைக்கப்பட்டது.

**சாட்சியின் கையொப்பம்**

Taken down by me in open court. Read over to the deponent and admitted by him to be correct.

Sd/–Hariharan

IX Metropolitan / Judicial Magistrate,
Saidapet, Chennai–15.